தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

15.10.2012 P.M

16.10.2012 A.M

## வடகிழக்கு பருவமழை 3 நாள்களில் தொடங்கும்

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை மூன்று நாட்களில் தொடங்க வாய்ப்பு இருக்கிறது என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் தெரிவித்தார்.

இது குறித்த அவர் கூறியது: தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை மூன்று நாட்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது முடிந்ததும் கீழைக் காற்று வீசத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கீழைக்காற்று தொடங்கியவுடன் கடலோர மாவட்டங்களில் மழை பெய்யக்கூடும். அவ்வாறு மழை பெய்யத் தொடங்கினால் அது வடகிழக்கு பருவ மழையாக கணக்கிடப்படும். அது அக்டோபர் 18 அல்லது 19-ஆம் தேதி முதல் பெய்யத் தொடங்கும் என்றார்.

இடியுடன் மழைக்கு வாய்ப்பு: செவ்வாய்க்கிழமை வானம் பொதுவாக மேக மூட்டத்துடன் காணப்படும். தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அநேக இடங்களிலும், கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் மழையும் பெய்யு வாயப்பு இருக்கிறது என்றும் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் பதிவான மழையின் அளவு(திங்கள்கிழமை காலை 8.30 மணி நிலவரம்) தமிழகத்தில் நிலக்கோட்டையில் 16 செ.மீ, சேலத்தில் 14 செ.மீ, குமாரப்பாளையம் தலா 13 செ.மீ மழையும் பெய்துள்ளது. திருவண்ணாமலை, தஞ்சாவூர், பரமக்குடி, உத்தமபாளையத்தில் தலா 2 செ.மீ, குடியாத்தம், காரைக்குடி உள்பட பல்வேறு பகுதிகளில் தலா 1 செ.மீ மழையும் பெய்துள்ளது.

## மேட்டூர் தண்ணீர் திறப்பு: 16 ஆயிரம் கன அடியாக குறைப்பு

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்பட்டு வந்த நீரின் அளவு திங்கள்கிழமை காலை முதல் குறைக்கப்பட்டது.

கடந்த 17-ஆம் தேதி முதல் மேட்டூர் அணையிலிருந்து சம்பா நெல் சாகுபடிக்காகத் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. தண்ணீர் திறப்பு பாசனப் பகுதிகளின் தேவைக்கு ஏற்ப திறக்கப்படும். கடந்த 8-ஆம் தேதி காலை முதல் பாசனத்துக்கு வினாடிக்கு 18 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது.

இப்போது பாசனப் பகுதிகளில் நீரின் தேவை குறைந்துள்ளதால் திங்கள்கிழமை காலை முதல் பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 16 ஆயிரம் கனஅடியாகக் குறைக்கப்பட்டது. மேட்டூர் அணையின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு பெய்த மழையின் காரணமாக அணைக்கு வரும் நீரின் அளவு திங்கள்கிழமை மாலை 2,883 கனஅடியாக அதிகரித்தது.

ஞாயிற்றுக்கிழமை மாலை மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 1,362 கனஅடி தண்ணீர் மட்டுமே வந்து கொண்டிருந்தது. திங்கள்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 64.10 அடியாக இருந்தது.

மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்கு திறக்கப்பட்டு வந்த தண்ணீர் திங்கள்கிழமை காலை முதல் நிறுத்தப்பட்டது. பாசனப் பகுதிகளில் மழை பெய்துள்ளதால் தண்ணீர் நிறுத்தப்பட்டதாக பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

15th oct 2012 P.M

## உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோய் தடுப்பு முறை



உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோய் தடுக்கும் முறைகள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி விளக்கியுள்ளார்.

**இதுகுறித்து அவரது செய்திக்குறிப்பு:** செய்யாறு வட்டாரத்தில் பயிரிடப்பட்டுள்ள உளுந்து பயிர் தற்போது மானாவாரி பருவத்தில் பயிர் செய்யப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் மஞ்சள் தேமல் வைரஸ் காரணமாக உளுந்து பயிரின் இலைகள் மஞ்சளாக மாறி இலையின் மூலம் நடைபெறும் ஒளிச்சேர்க்கை குறைந்து மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட செடிகளை வேருடன் பிடுங்கி எறிந்துவிட வேண்டும். தவறினால் வெள்ளை ஈக்கள் மூலம் நல்ல நிலையில் உள்ள செடிகளுக்கும் இந்நோய் பரவிவிடும்.

தடுப்பு முறை: இமிடாகுளோரிபைடு, மீத்தைல்டெமட்டான், டைமித்தோயேட், பாஸ்போமிடான் போன்ற மருந்துகளில் ஏதாவது ஒன்றை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி. வீதம் கலந்து தெளித்து மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்தலாம். மேலும் நோய் வராமல் தவிர்க்க, விதைக்கு 2 கிராம் பூஞ்சானக் கொல்லி மருந்து திரம் கேப்டான் கலந்து விதைத்து பயன்பெறலாம்.

## அன்னிய நேரடி முதலீட்டால் விவசாயிகளின் பொருள்கள் பாதுகாக்கப்படும்'

சில்லறை வணிகத்தில் நேரடி அன்னிய முதலீடு மூலம் விவசாயிகளின் விளைபொருள்கள் வீணாகாமல் பாதுகாக்கப்படும் என்று பிரதமர் அலுவலக இணை அமைச்சர் வி.நாராயணசாமி தெரிவித்தார்.

புதுச்சேரி இளைஞர் காங்கிரஸ் அமைப்பின் செயற்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு இளைஞர் காங்கிரஸ் தலைவர் இளையராஜா தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மத்திய அமைச்சர் வி.நாராயணசாமி பேசியது:

இந்தியாவில் விவசாயிகளின் விளைபொருள்கள் ஆண்டுதோறும் 35 சதவீதம் அழுகி வீணாகின்றன. சில்லறை வணிகத்தில் அன்னிய முதலீட்டின் மூலம் அவர்கள் குளிர்சாதனக் கிடங்குகள் அமைப்பதால் அவை பாதுகாக்கப்படும். அன்னிய முதலீட்டை அனுமதிப்பதன் மூலம் விவசாயிகளுக்கு எந்த பாதிப்பும் வராது.

அரவிந்த் கேஜ்ரிவால் போன்றோர் மத்திய அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டு கூறும்போது அதை ஆதாரத்தோடு கூறவேண்டும்.

புதுச்சேரியில் இளைஞர் காங்கிரஸ் அமைப்பினர் வேகமாக செயல்பட வேண்டும். மேலும் நாம் அனைவரும் இணைந்து பணியாற்றினால் புதுச்சேரியில் மீண்டும் ஆட்சியை பிடிக்கலாம் என்றார்.

இக் கூட்டத்தில் புதுச்சேரியில் ஆளும் என்.ஆர். காங்கிரஸின் அரசைக் கண்டித்து மாநிலம் முழுவதும் முக்கிய பகுதிகளில் தெருமுனைப் பிரசாரம் செய்வது. வறுமைக் கோட்டுக்குகீழ் உள்ள

ஏழை மக்களுக்கு தரமான அரிசி வழங்க வலியுறுத்துவது. பணிநீக்கம் செய்யப்பட்ட 4000 அரசு ஊழியர்களை உடனடியாக மீண்டும் பணியில் அமர்த்தக்கோரி அரசாங்கத்தை வலியுறுத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக் கூட்டத்தில் அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் செயலர் சிகாபுதின், பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ஜெபி மேத்தர், முன்னாள் முதல்வர் வைத்திலிங்கம், காங்கிரஸ் தலைவர் ஏ.வி.சுப்பிரமணியன், இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலர்கள் ராஜாராம், சத்தியவேந்தன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலர் சிகாபுதீன் மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ஜெபிமேத்தர் ஆகியோர் நிருபர்களிடம் கூறியது: இளம் காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தியின் உத்தரவுப்படி புதுச்சேரியில் இளைஞர் காங்கிரஸ் தேர்தல் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இளைஞர் காங்கிரஸ் கட்சியினருக்கு அகில இந்திய அளவில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை கொண்டு பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது என்றனர்.

## மழை பொய்த்ததால் குமரி மாவட்டத்தில் வறட்சி நீடிப்பு: கேள்விக்குறியாகும் கும்பப்பூ சாகுபடி

கன்னியாகுமரி மாவட்டத்தில் வறட்சி நீடிப்பதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. அணைகளிலும் போதிய நீர்இருப்பு இல்லாததால் கும்பப்பூ சாகுபடி நடைபெறுமா என்ற ஏக்கத்தில் விவசாயிகள் உள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 25 ஆயிரம் ஹெக்டேரில் இருபோக நெல் சாகுபடி நடைபெற்று வந்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை சரியாகப் பெய்யவில்லை. கடந்த ஜூனில் பெய்ய வேண்டிய தென்மேற்கு பருவ மழை பொய்த்ததால் கன்னிப்பூ சாகுபடி 5,787 ஹெக்டேரில் மட்டும் நடைபெற்றது.

2011-ல் கன்னிப்பூ சாகுபடி பரப்பளவு 8,263 ஆக இருந்ததாக விவசாயத் துறையினர் கூறுகின்றனர்.

நாஞ்சில்நாடு புத்தனாறு, தோவாளை, பழையாறு, பாண்டியன் கால்வாய் போன்ற கால்வாய்களின் கடைவரம்புப் பகுதிகளுக்கு தண்ணீர் வராததால் விவசாயப் பணிகள் நடைபெறவில்லை.

பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளில் இருப்பில் இருந்த குறைந்த அளவு தண்ணீரைப் பயன்படுத்தி பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் காப்பாற்றப்பட்டன. இன்னும் 15

நாள்களுக்குள் கும்பப்பூ சாகுபடி தொடங்கப்பட வேண்டும். கடந்த இருநாள்களாக மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது.

இந்த மழையால் அணைகளில் சராசரியாக 1 அடி தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது.

இப்போது பேச்சிப்பாறையில் 4.30 அடி தண்ணீரும், பெருஞ்சாணியில் 18.20அடி தண்ணீரும் உள்ளது.

2011 அக்டோபரில் பேச்சிப்பாறையில் 22.30 அடி தண்ணீரும், பெருஞ்சாணியில் 24.10 அடி தண்ணீரும் இருந்தது.

இந்நிலையில், கும்பப்பூ சாகுபடியை எப்படி தொடங்குவது என்ற சந்தேகத்தில் விவசாயிகள் உள்ளனர்.

இதற்கிடையே கடந்த ஒரு வாரமாக வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. கடந்த இருநாள்களாக பிற்பகலில் லேசான மழையும் அதைத் தொடர்ந்து இரவு முழுவதும் மிதமான காற்றும் வீசி வருகிறது.

மழை பெய்யாததால் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் வறட்சியின் பிடியில் உள்ளன. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. ஆழ்குழாய் கிணறுகளில் தண்ணீர் இல்லை.

கடலோரப் பகுதிகளில் போடப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளில் தண்ணீர் உப்பாக மாறி வருகிறது.

கிராமப்பகுதி மட்டுமன்றி நகரப் பகுதிகளிலும் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவி வருகிறது. கிராமப்பகுதிகளில் அதிகபட்சமாக 3 நாள்களுக்கு ஒருமுறையும், நாகர்கோவில் நகரப் பகுதிகளில் தாழ்வான இடங்களில் வாரம் ஒருமுறையும், மேடானப் பகுதிகளுக்கு 10 முதல் 12 நாள்களுக்கு ஒரு முறையும் தண்ணீர் கிடைப்பதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

நாகர்கோவில் நகராட்சிப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கும் முக்கடல் நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் தொடர்ந்து மைனஸ் என்ற அளவில் உள்ளது. கடந்த செப்டம்பரில் பெருஞ்சாணி அணையிலிருந்து நாகர்கோவிலுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதால் முக்கடல் நீர்த்தேக்கத்தின் தண்ணீர் இருப்பு மேலும் குறையாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அஞ்சுகிராமம், அழகப்பபுரம், கனகப்பபுரம் உள்ளிட்ட கடைவரம்புப் பகுதிகளில் தென்னை மரங்கள் தண்ணீரின்றி கருகி வருகின்றன. அதுபோல் கடைவரம்புப் பகுதிகளில் உள்ள சுமார் 700 குளங்கள் தண்ணீரின்றி வறண்டு கிடக்கின்றன.

மழை பெய்தால் மட்டுமே விவசாயிகள் விவசாயப் பணிகளைத் தொடர முடியும். குடிநீர்த் தட்டுப்பாடும் நீங்கும்.

## அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்குப் பயிற்சி

அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மைத் துறையின் சார்பாக வல்லம் வட்டாரத்தில் இருந்து விவசாயக் குழுவினர் கண்டுணர் சுற்றுலா மற்றும் பயிற்சி பெற்றனர்.

÷கூட்டேரிபட்டில் அமைந்துள்ள வேளாண் வணிக மையம், பாலப்பட்டில் அமைந்துள்ள தோட்டக்கலை நாற்றுப் பண்ணையை விவசாயிகள் பார்வையிட்டனர். பண்ணை மேலாளர் ராஜ்குமார் விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினார்.

÷பிறகு விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் அமைந்துள்ள மண் ஆய்வு கூடம், உயிரியல் கட்டுபாட்டு ஆய்வகம் ஆகியவற்றையும் பார்வையிட்டனர். இதில் வேளாண்மை அலுவலர்கள் சுப்பிரமணியன், சுஜாதா ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

÷இதனைத் தொடர்ந்து இருவேல்பட்டில் அமைந்துள்ள அரசு விதைப்பண்ணை மற்றும் அரசு விதை சுத்திகரிப்பு நிலையத்தில் பயிற்சி பெற்றனர். விவசாயிகளுக்கு உதவி வேளாண்மை அலுவலர் சபாபதி பயிற்சி அளித்தார்.

÷பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில்நுட்ப சிறப்பறிஞர்கள் பாரி, பழனிகுமார், உதவி விதை அலுவலர் கர்ணன், உதவி வேளாண்மை அலுவலர்கள் தீனதயாளன், ஞானவேல் ஆகியோர் செய்திருந்தனர்.

## நவ. 19 -ல் ஆர்ப்பாட்டம்: கரும்பு விவசாயிகள் முடிவு

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, சர்க்கரை ஆலைகள் முன் நவம்பர் 19ம் தேதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது என்று கரும்பு விவசாயிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.

தருமபுரியில் நேற்று நடைபெற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. காவிரியில் தண்ணீர் பெற உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு தெரிவிப்பது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டுக்கு விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி தலைமை வகித்தார். மாநிலப் பொதுச் செயலாளர் கே.சுந்தரம், பொருளாளர் கே.பி.வேலுமணி, துணை பொதுச் செயலாளர் ஆர்.ராஜசிதம்பரம், தருமபுரி மாவட்டத் தலைவர் பி.ஆர்.செங்கோடன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## **செம்மைக் கரும்பு சாகுபடி வயல் ஆய்வு**

கள்ளக்குறிச்சி, ஏமப்பேர் உள்ளிட்ட பகுதிகளில் செம்மை கரும்பு சாகுபடி முறையிலான வயல்களை விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குநர் த. சேகர் அண்மையில் ஆய்வு செய்தார்.

சாதரண முறையில் ஒரு ஏக்கருக்கு கரும்பு நடவுச் செய்ய 5 ஆயிரம் கிலோ (5 மெட்ரிக் டன்) தேவைப்படுகிறது. ஆனால் செம்மை கரும்பு சாகுபடி செய்ய 500 கிலோ மட்டும் போதுமானது. ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் ஒரு பரு கரணை போதுமானது.

சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவிகிதம் மானியத்திலும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவிகிதம் மானியத்திலும் சொட்டு நீர் பாசனத்தை அரசு அமைத்து தருகிறது.

இம் முறை மூலம் கரும்பு நடவுச் செய்தால் ஏக்கருக்கு 20 மெட்ரிக் அதிக மகசூல் கிடைக்கிறது.

எனவே விவசாயிகள் அனைவரும் செம்மை கரும்பு சாகுபடி செய்து கூடுதல் வருமானம் பெறலாம் என அவர் அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது, வேளாண்மை உதவி இயக்குனர் கே.தர்மலிங்கம், வேளாண்மை அலுவலர் ஆர்.கோபால், விரிவாக்க அலுவலர் டி.தவமணி, எம்.ரமேஷ் குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## **அதிக மகசூல் பெற தரமான விதைகளைப் பயன்படுத்த வேண்டும்: விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்**

விவசாயிகள் அதிக மகசூல் பெற தரமான விதைகளைப் பயன்படுத்த வேண்டும் எனக் காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் அறிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

÷வேளாண்மையில் அதிக மகசூல் பெற தரமான விதைகளை பயன்படுத்துவது மிக முக்கிய தொழில்நுட்பம் ஆகும். தரமான விதை என்பது, நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குக் குறையாத முளைப்பு திறன், புறத்தூய்மை, இனத்தூய்மை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு ஈரப்பதம், பிற ரக விதையின்றி பூச்சுநோய் தாக்குதல் இல்லாமல் இருப்பது அவசியம். ÷எனவே, உயர் விளைச்சலைப் பெறவும், விவசாயிகள் தாங்கள் உபயோகப்படுத்தும் விதைகள் தரமானது தான் என அறிந்து விதைத்திடவும் விதை பரிசோதனை அவசியமாகும்.

÷விவசாயிகள் தங்கள் கைவசம் உள்ள விதைகளின் தரத்தை அறியவும், விதை விற்பனையாளர்கள் தங்களது விதைகளின் தரத்தை அறிந்து கொள்ளவும், விதை மாதிரிகளைத் தாங்களாகவே உரிய அளவில் எடுத்து, உலர்ந்த துணிப்பையில் இட வேண்டும்.

÷அதனுடன் விதை மற்றும் மாதிரி அனுப்புவோரின் விவரங்களை இணைத்து, விதை

பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை ஆய்வகம், காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

÷உடன் விதை பரிசோதனை கட்டணமாக ரூ.30 செலுத்த வேண்டும். விதை பரிசோதனை முடிவுகள் அவரவர் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் எனச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நெல்லுக்கு ரூ.2,500, கரும்புக்கு ரூ.3,500:விவசாயிகள் சங்கம் கோரிக்கை

நெல் குவிண்டாலுக்கு ரூ.2,500, கரும்பு டன்னுக்கு ரூ.3,500 கொள்முதல் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த சங்கத்தின் காஞ்சிபுரம் மாவட்ட மாநாடு அக்டோபர் 12, 13-ம் தேதிகளில் திருப்போரூரில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் கே. நேரு தலைமை வகித்தார். மாநில துணைச் செயலாளர் தயாநிதி தொடக்கி வைத்தார்.

÷தீர்மானங்கள்: காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்குப் பயன்படும் விளை நிலங்களைத் தொழிற்சாலை, கல்வி நிறுவனங்கள் மற்றும் வீட்டு மனைகளாக்குவதற்குத் தடை விதிக்க வேண்டும்.

÷பருவ மழை தொடங்குவதற்கு முன் ஏரி, குளம், கால்வாய்களை தூர்வாரி சீரமைக்க வேண்டும். நேரடி கொள்முதல் நிலையங்களை அனைத்து ஒன்றியங்களிலும் கூடுதலாகத் திறக்க வேண்டும். விவசாய விளை பொருள்களை அரசே கொள்முதல் செய்ய வேண்டும்.

விவசாயத்துக்கு 24 மணி நேரமும் தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும். பயிரிடும் அனைத்து விவசாயிகளுக்கும் வட்டியில்லா கடன் வழங்க வேண்டும். கூட்டுறவு தேர்தலை கட்சிப் பாகுபாடின்றி நடத்தி முடிக்க வேண்டும்.

÷திருப்போரூர் - செங்கல்பட்டு இடையே கூடுதலாக அரசு பஸ்களை இயக்க வேண்டும். சென்னை அடையாறு மற்றும் பிராட்வேயில் இருந்து திருப்போரூர் வழியாக செங்கல்பட்டுக்கு மாநகர பஸ்களை இயக்க வேண்டும்.

÷மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கூடுதல் நிதி ஒதுக்கி இயக்கிட வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கு விதைபுல், உரம், பூச்சி மருந்துகளை வழங்கி மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் கொள்முதல் செய்ய வேண்டும் உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மாவட்டச் செயலாளர் சி. பாஸ்கர், துணைத் தலைவர் அழகேசன், சி.ஐ.டி.யூ. மாவட்டச் செயலாளர் முத்துக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**15.10.2012 P.M**

**16.10.2012 A.M**

## உயர்ந்தது விதை வெங்காயம் விலை

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவி.,யில் விதை வெங்காயம் விலை உயர்வால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஸ்ரீவி.,யில் பிள்ளையார்நத்தம், பூவாணி, விழுப்பனூர், குன்னூர் உட்பட சுற்றுப்புற பகுதிகளில், மழை பெய்து வருவதால் , வெங்காயம் நடவு செய்ய உள்ளனர். கடந்த சில மாதங்களுக்கு முன் , விதை வெங்காயம் கிலோ 20 ரூபாய்க்கு இருந்தது. தற்போது 40 ரூபாய்க்கு விற்கப்படுவதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயி அய்யனார்,"" ஸ்ரீவில்லிபுத்தூரில் வெங்காயம் நடவு செய்து வருகின்றனர்.கடந்த சில மாதங்களை காட்டிலும்,விதை விலை தற்போது அதிகரித்துள்ளது. திண்டுக்கல் , தேனி போன்ற ஊர்களிலிருந்து வாங்க வேண்டி உள்ளது,"என்றார்

## ஓசூர் பகுதியில் பலத்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

ஓசூர்: ஓசூர், தேன்கனிக்கோட்டை பகுதியில் கடந்த இரு நாட்களாக நல்ல மழை பெய்து வருவதால், விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் ஆண்டு முழுவதும் குளிர்ச்சியான காலநிலை நிலவும். கடந்த இரு ஆண்டாக பருவ மழைகள் முற்றிலும் ஏமாற்றியதால் குளிர்ந்த காலநிலை மாறி, கடும் வறட்சியால் வெப்ப காற்று வீசியது.கடந்த ஆறு மாதமாக மழையில்லாமல் ஆழ்துளை கிணறுகள், விவசாய கிணறுகள் வறண்டு, விவசாய பயிர்கள் கருகியது. இதனால், விவசாயம் பணிகள் பாதிக்கப்பட்டன. குடிநீருக்காக போடப்பட்ட ஆழ்துளை கிணறுகள் வறண்டதால் ஓசூர், தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம், தளி ஆகிய நகரப்பகுதிகள் மட்டுமின்றி கிராம பகுதி மக்களும் கடும் குடிநீர் தட்டுப்பாட்டால் அவதியடைந்தனர்.பொதுமக்கள் காலிகுடங்களுடன் நகராட்சி, பஞ்சாயத்து அலுவலங்களை முற்றுகையிட்டும், சாலை மறியலிலும் ஈடுபட்டனர். கடந்த இரு நாட்களாக ஓசூர், தேன்கனிக்கோட்டை பகுதியில் நல்ல மழை பெய்து வருகிறது. குறிப்பாக சூளகிரி, தளி, அஞ்செட்டி, தேன்கனிக்கோட்டை பகுதியில் தொடர் மழையால்

விவசாய கிணறுகள், குளம், ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. ஓசூர் பகுதியில் விட்டு, விட்டு இடைவிடாமல் மழை பெய்தது.நேற்று பகலில் மட்டும் ஓரளவு நல்ல மழை பெய்தது. இதனால், குடியிருப்பு பகுதிகள், சாலைகளில் மழை நீர் ஓடியது. இதே மழை ஓரிரு வாரம் நீடித்தால், ஓரளவு வறட்சி முடிவுக்கு வந்து, குடிநீர் ஆதாரம் பெருகும் வாய்ப்புள்ளது.நேற்று முன்தினம் பெய்த மழையளவு விபரம்: ஓசூர், 38 மி.மீ., சூளகிரி, 92, தளி, 100, அஞ்செட்டி, 65, தேன்கனிக்கோட்டை, 50, ராயக்கோட்டை, 43 மி.மீ., மழை பெய்துள்ளது. நேற்றும் ஓசூர், தேன்கனிக்கோட்டை பகுதியில் காலை முதல் மாலை வரை இடைவிடாமல் மழை பெய்ததால், விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கால்நடை இலவச முகாம்

கூடலூர்: கூடலூர் பொன்னூரில் நடந்த இலவச கால்நடை முகாமில் 108 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.கூடலூர் நாடுகாணி பொன்னூர் பகுதியில் பிரகர்தி அறக்கட்டளை, மனித வளமேம்பாட்டு மையம் சார்பில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நேற்று நடந்தது. பிரகர்தி அறக்கட்டளை இயக்குனர் கால்நடை டாக்டர் சுகுமாரன் தலைமையில் மருத்துவ குழுவினர் கால்நடைக்கு சிகிச்சை அளித்தனர். முகாமில் 108 கால்நடைகளுக்கும், 117 கோழிகள், 8 நாய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. முகாமில் மனிதவள மேம்பாட்டு மைய தலைவர் சுப்ரமணி, செயலர் ராஜேந்திரன் கலந்து கொண்டனர்.

## தொடரும் மழையால்விவசாயிகள் மகிழ்ச்சி

கரூர்: மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.நடப்பாண்டு கரூர் மாவட்டத்தை பொறுத்தவரை தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. தற்போது வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர். ஆனால், கரூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில், கடந்த, ஒரு வாரமாக கோடையை போன்று வெயில் சுட்டெரித்தது.இந்நிலையில், கடந்த, 8ம் தேதி முதல், 11ம் தேதி வரை, கரூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மேகமூட்டம் இருந்தது. கடந்த 11ம் தேதி காலை வரை, கரூர் மாவட்டத்தில், 782 மி.மீ., மழையும், சராசரியாக, 39.8 மி.மீ., மழையும் பதிவானது. கடந்த, 48 மணி நேரத்தில், கரூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மழை பெய்யவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல், கரூர் மாவட்டத்தில் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

மழையளவு விபரம்: (மி.மீ.,) கரூர் 30.2, அணைப்பாளையம் 38.2, க.பரமத்தி 18.2, கிருஷ்ணாராயபுரம் 26, மாயனூர் 26, குளித்தலை 29, கடவூர் 32.4, அரவக்குறிச்சி 31, க.பரமத்தி 12.4 ஆகிய அளவுகளில் மழை பெய்தது.காவிரியாற்று பாசன பகுதிகளான குளித்தலை, கிருஷ்ணராயபுரம், கிணற்றுபாசனத்தை நம்பியுள்ள தோகமலை, கடவூர், அமராவதி. ஆற்று பாசன பகுதிகளான அரவக்குறிச்சி, க.பரமத்தி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பரவலான மழை பெய்து வருவதால், விவசாயிகள், நெல், வாழை உள்ளிட்ட பயிர்களை பயிரிட துவங்கியுள்ளனர்.

## வீட்டின் கூரை மீது திராட்சை கொடி

திருவள்ளூர்: வீட்டோரம் திராட்சைக் கொடி வளர்ந்து, கூரை மீது பரவி உள்ளது. இதில், கொத்து கொத்தாய் திராட்சைகள் காய்ப்பதை, பொது மக்கள் அதிசயமாக பார்த்து செல்கின்றனர்.திருவள்ளூர் நகராட்சிக்கு உட்பட்ட, பெரியகுப்பம் போலீஸ் குடியிருப்பு அருகே, சேலை செல்லும் சாலையோரம், சண்முகம் என்பவரது வீடு உள்ளது. இவரது வீட்டை ஒட்டி, திராட்சைக் கொடி வளர்ந்தது. இக்கொடியை யாரும் பிடுங்கி விடக்கூடாது என்பதற்காக, அதைச் சுற்றி வேலி அமைத்தார். தொடர்ந்து கொடி வளர்ந்து வீட்டின் கூரை மீது பரவியதும், கொத்து கொத்தாய் திராட்சைகள் காய்த்து உள்ளது. இதை, அவ்வழியாகச் செல்லும் மக்கள் அதிசயமாக பார்த்துச் செல்கின்றனர். இதுகுறித்து சண்முகம் கூறுகையில், ""திருவள்ளூர் நகரில் உள்ள மண் வளத்துக்கு திராட்சைக் கொடி வளர்வது சிரமம். ஆனால், அதிசயமாக திராட்சைக் கொடி வளர்ந்தது. இதைப் பராமரிக்க, கொடியை சுற்றிலும் வலை அமைத்து உள்ளேன்," என்றார்.

## சேலம் மாவட்டத்தில் 487 மி.மீ., மழைப்பொழிவு

சேலம்: ஒவ்வொரு ஆண்டும், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில், தென்மேற்கு பருவமழை பெய்யக்கூடும். அந்த மழையை எதிர்பார்த்தே, விவசாயிகள் பயிர் சாகுபடி செய்வர். இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்ததால், வற்றாத ஆறுகள் கூட வறண்டு போயின. தண்ணீர் இருந்தால் மட்டுமே விவசாயம் செய்ய முடியும் என்ற இக்கட்டான சூழ்நிலையில், கிணற்று பாசனத்தை நம்பி பயிர் விதைத்தனர். ஆனால், அவர்களால் முழுமையாக விவசாயம் செய்ய முடியவில்லை.அதுமட்டுமின்றி, மின்வெட்டு பிரச்னைக்கு, மழை இல்லாததும் ஓர் காரணமாக கூறப்படுகிறது. அதனால், ஒவ்வொரு மாவட்டத்திலும், மழை வேண்டி, பொதுமக்கள் கோவில்களில் வழிபாடு நடத்தி வருகின்றனர். சில நாட்களாக, காலையில் வெயில் கொளுத்தியபோதும், மாலை, இரவு நேரங்களில் நல்ல மழை பெய்து வருகிறது.

சேலம் மாவட்டத்தில், ஒரு நாள் விட்டு ஒரு நாள் மாலைப்பொழுதில் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம், இரவு, 9.30 மணிக்கு துவங்கிய மழை, நள்ளிரவு, 1.30 மணி வரை நீடித்தது. நான்கு மணி நேரம் நீடித்த மழையால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.நகரின் முக்கியப் பகுதிகளில் தண்ணீர் வெளியேற வழியில்லாததால், வீடுகளுக்குள் புகுந்தன. சாக்கடை கால்வாய்களில், பிளாஸ்டிக் கழிவுகள் தேங்கி கிடப்பதால், மழை நீர் குளம்போல் தேங்கி கிடந்தது. மாநகராட்சி அதிகாரிகள், மழை நீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.எப்போதும் இல்லாத அளவில், நேற்று முன்தினம், 487 மி.மீ., அளவில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, சேலத்தில், 137 மீ.மீட்டரும், குறைந்தபட்சமாக ஆத்தூரில், 2.60 மி.மீ., மழையும் பெய்துள்ளது.அக்டோபர், நவம்பர் மாதங்களில், வட கிழக்கு பருவமழை துவங்கும். அதற்கு அச்சாரமாக, ஒரு சில மாவட்டங்களில், தற்போது மழை பெய்து வருவதால், அடுத்த மாதம் மழையின் வேகம் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.சேலம் மாவட்டத்தில், மழைப்பொழிவு விபரம்(மி.மீ.,): ஆத்தூர் - 2.60, ஓமலூர் - 114, சங்ககிரி - 13.40, சேலம் - 137.50, ஏற்காடு - 100,
மேட்டூர் - 55.60, வாழப்பாடி - 5, இடைப்பாடி - 34, தம்மம்பட்டி - 24.80; மொத்தம் 486.90.

## 39 டன் காய்கறி விற்பனை

ஆத்தூர்: ஆத்தூர் உழவர் சந்தையில், மகாளய அமாவாசையொட்டி, 39 டன் காய்கறிகள் விற்பனையானது.ஆத்தூர், புதுபேட்டை உழவர் சந்தையில், நேற்று, மகாளய அமாவாசையொட்டி தக்காளி, வெண்டை, கத்தரி, வெங்காயம், கீரை உள்பட, 57 வகையான காய்கறிகளை, 174 விவசாயிகள் விற்பனைக்கு எடுத்து வந்தனர்.
இதில், 39 ஆயிரத்து, 500 கிலோ காய்கறிகள், கீரை வகைகளை, 7,200 நுகர்வோர்கள் வாங்கிச் சென்றனர். அதனால், நேற்று ஒரே நாளில், 39 டன் காய்கறிகள், ஆறு லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. காய்கறிகள் விலை குறைவாக இருந்ததால், பொதுமக்கள் அதிகளவில் வாங்கிச் சென்றனர்.

## மழையால் வரட்டுப்பள்ளம் அணை நீர் மட்டம் உயர்வு

அந்தியூர்: அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணை நீர்ப்பிடிப்பு பகுதியில் நான்கு நாட்களாக பெய்த கன மழையால், நீர்மட்டம் "கிடுகிடு'வென உயர்ந்து, 19 அடியை தொட்டது.
அந்தியூர் அடுத்த வரட்டுப்பள்ளம் அணையின் மொத்த கொள்ளளவு, 33.3 அடி. ஆண்டுதோறும்

வடகிழக்கு பருவமழை துவங்கிய சில வாரங்களில், அணை நிரம்பி வழியும். வரட்டுப்பள்ளம், கும்பரவாணி, கல்லுமடுவு ஆகிய நீர்ப்பிடிப்பு பகுதியிலிருந்து புரண்டோடி வரும் தண்ணீரால் அணை நிரம்புகிறது.கடந்தாண்டு, வடகிழக்கு பருவமழை ஓரளவு கை கொடுத்ததால், ஒரே ஒரு முறை மட்டும் அணை நிரம்பியது. வரட்டுப்பள்ளம், வட்டக்காடு, மந்தை, செல்லம்பாளையம், ஜீ.எஸ்., காலனி உள்ளிட்ட பல ஊர்களில், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவு கொண்ட, ஐந்நூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் அணை நீரை நம்பியுள்ளனர்.கடந்த ஜூன் மாதத்தில், பழைய, புதிய ஆயக்கட்டு பாசனம், வாய்க்கால் பாசனத்துக்கும் நீர் திறந்து விட்டதால், அணை நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வறண்டது. கடந்த சில நாட்களாக, அந்தியூர் சுற்று வட்டார பகுதியில் கனத்த மழை பெய்து வருகிறது. மேலும், வரட்டுப்பள்ளம் அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளான வரட்டுப்பள்ளம், கும்பரவாணி, கல்லுமடுவு ஆகிய இடங்களில் கனத்த மழை பெய்தது.இதனால், தண்ணீரின்றி வறண்டு போன அணையின் நீர்மட்டம், 12 அடியாக உயர்ந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, 10 மணியில் இருந்து இரண்டு மணி நேரம் பெய்த கன மழையால், ஒரே நாளில் ஏழு அடி உயர்ந்து, 19 அடியாக உள்ளது. இதேபோல், நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்தால், இன்னும் சில வாரங்களில் கொள்ளளவான, 33.3 அடியை எட்டிவிடும். படிப்படியாக அணையின் நீர்மட்டம் உயர்ந்து கொண்டே வருவதால், அணை சார்ந்த பாசன விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கொட்டித் தீர்த்த மழை :ஒரே நாளில் 11 அடி உயர்ந்த அணைகள்

வத்திராயிருப்பு:மாவட்டத்தில் பெ#து வரும் பரவலான மழையால், வத்திராயிருப்பு பிளவக்கல் அணைகளின் நீர்மட்டம், ஒரே நாளில் 11 அடி உயர்ந்தது. மாவட்டத்தில் ஒரு வாரமாக பரவ லாக மழை பெய்து வருகிறது.இதனால் அணைகளுக்கும் நீர் வரத்து துவங்கியுள்ளது. நேற்று காலை 6 மணி வரை, ராஜபாளையம் 60, ஸ்ரீவில்லிபுத்தூர் 75, வத்திராயிருப்பு 74.2, பிளவக்கல் 57.4, சிவகாசி 11.6, சாத்தூர் 4, விருதுநகர் 5.2, அருப்புக்கோட்டை11, கோவிலாங்குளம் 7.4, காரியாபட்டி 13, திருச்சுழி 11.3 மி.மீ., மழை பெய்துள்ளது.அக்.,1 முதல் 15 வரை, ராஜபா ளையம் 150, ஸ்ரீவில்லிபுத்தூர் 172.20, வத்திராயிருப்பு 147, பிளவக்கல் 176.80, சிவகாசி 135, சாத்தூர் 18, விருதுநகர் 249.60, அருப்புக்கோட்டை36.40,கோவிலாங்குளம் 21.40, காரியாபட்டி 89, திருச்சுழி 36.60, வெம்பக்கோட்டை 94.60 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் சராசரியாக 110. 55 மி.மீ., மழை பெய்துள்ளது.வத்திராயிருப்பு பகுதியில் அக்., 14 ல் மாலை 5 மணிக்கு, பெய்யத்துவங்கிய மழை, இடைவிடாமல் இரவு 10 மணி வரை பெய்தது.

அரைமணி நேர இடைவெளிக்கு பின், மறுநாள் அதிகாலை 1 மணி வரை பெய்தது. இதனால் வயல்களில் மழைநீர் நிரம்பி வழிந்தது. சதுரகிரி மலையில் உள்ள ஓடைகள், ஆறுகளில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பிளவக்கல் அணைகளை யொட்டிய மேற்குத்தொடர்ச்சிமலைப்பகுதியில் பெய்த கனமழையால், நீர்வரத்தே இல்லாமல் வறண்டு கிடந்த, பிளவக்கல் கோவிலாறு அணை, பெரியாறு அணைக்கு திடீர் நீர்வரத்து ஏற்பட்டது.இதனால், ஒரே நாள் மழையில், இரு அணைகளின் நீர்மட்டமும் 11.50 அடி உயர்ந்துள்ளது. கோவிலாறில் 11.50 அடி, பெரியாறில் 25 அடிநீரும் இருப்பு உள்ளது. இது தவிர, பல கண்மாய்களிலும் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இது, விவசாயிகளை மகிழ்ச்சியடைய செய்துள்ளது.விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் விஜயமுருகன், ""உழுது, நடவு செய்யும் பணிகளுக்கு மட்டுமே மழை போதுமானதாகஉள்ளது. தொடர் மழை பெய்தாலே விவசாயிகள் தப்பிக்க முடியும். மழை நீடித்தால் மட்டுமே பலன் உண்டு,"என்றார். ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூரில் கடந்த சில மாதங்களாக மழை பெய்யாததால் கண்மாய்கள் தண்ணீரின்றி வறண்டன. நிலத்தடி நீர் மட்டமும் குறைந்தது. விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் திண்டாடினர். இந்நிலையில் கடந்த சில நாட்களாகஸ்ரீவில்லிபுத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில்பரவலாக மழை பெய்து வருகிறது.ஸ்ரீவி பகுதியில் நேற்று முன் தினம்இரவு 7 மணிக்கு,லேசான சாரலுடன் துவங்கிய மழை மறுநாள் காலை 2.30மணி வரை நீடித்தது. இதனால், கண்மாய் , கிணறுகளில் தண்ணீர் பெருகியது. மகிழ்ச்சியடைந்துள்ள விவசாயிகள், மக்காசோளம்,நெல் விதை நடவு பணியை துவக்கியுள்ளனர். நான்கு மாதத்திற்கு பின் மழைராஜபாளையம்: ராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலையில், ராஜாம்பாறை, மாவரசியம்மன் கோயில், முள்ளிக்கிடை பகுதிகள் உள்ளன. இங்கு பெய்யும் மழைநீர் முடங்கி யார் ஆறாக மலையடிவாரத்திற்கு வருகிறது. இந்த நீரை பிரித்து, நகராட்சி நீர்தேக்கத்தில் பெரும்பகுதி சேமிக்கப்படுகிறது. இந்த நீர் ராஜபாளையம் நகர்குடிநீருக்கு பயன்படுத்தப்படுகிறது.கடந்த மே மாதம், மலையில் பெய்த மழையினால், நீர் காத்த அய்யனார்கோயில் ஆற்றில், காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது. பின், நான்கு மாதமாக மழை இல்லை. சில நாட்களுக்கு முன்மழை வேண்டி அய்யனார்கோயிலில் யாகம் நடந்தது.இதை தொடர்ந்து, நேற்று முன்தினம் நள்ளிரவு மேற்கு தொடர்ச்சி மலை, நீர்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. முடங்கியார்ஆறு, நீராவி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.மழையால், ராஜபாளையம் நகரில், குளுமையான சூழல் உள்ளது.

## விதை நெல் ரகம் கிடைக்கவில்லை

தேவதானப்பட்டி:பெரியகுளம் விவசாய உதவி இயக்குநர் அலுவலகத்தில், எ.டி.டி. 45 ரக நெல்விதை விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை, என்ற புகார் எழுந்துள்ளது. பெரியகுளம் தாலுகா பகுதியில் நீர் நிலைகள் வறண்டு கிடப்பதால் முதல் போக நெல் சாகுபடிக்கு நாற்றாங்கால் பணியை விவசாயிகள் இன்னும் துவங்க வில்லை.கிணற்று நீரை ஆதாரமாகக் கொண்ட சில விவசாயிகள் மானியத்தில் நெல் விதை வாங்கி நாற்றாங்கால் பணியை துவக்கி உள்ளனர். பெரியகுளம் விவசாய உதவி இயக்குநர் அலுவலகத்தில்,எ.டி.டி. 45, எ.டி.டி.39 ரக நெல் விதைகள் கிலோவுக்கு 5 ரூபாய் மானியத்தில் வழங்கப்படுகிறது. தற்போது எ.டி.டி. 45 ரக நெல் விதை இருப்பு இல்லை. விவசாயிகள் விதை கேட்டு ஏமாற்றத்துடன் செல்கின்றனர். பருவமழை பெய்து விவசாயப்பணிகளை மேற்கொள்ள உள்ள நிலையில், தேவையான அளவு விதை நெல் இருப்பு வைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## காபி விவசாயிகளின் கவனத்திற்கு. .

.தாண்டிக்குடி:நடப்பு நிதியாண்டிற்கான காபி விதை பதிவு, காபி விரிவாக்க மையத்தில் நடைபெற்று வருகிறது.காபி வாரிய முதுநிலை தொடர்பு அலுவலர் அய்யப்பன் கூறியதாவது: காபி வாரியத்தின் அராபிகா, செலக்ஷன் ரகங்களான எஸ்-795, எஸ்எல்என்.5ஏ, எஸ்எல்என்.-5பி, -6, எஸ்எல்என்.-7.3, எஸ்எல்என்.-8, 9, 11, சந்திரகிரி மற்றும் ரொபஸ்டா ரகங்கள் விதை கள் விற்பனைக்கு உள்ளது. தேவைப்படும் காபி விவசாயிகள், ஒரு கிலோ விதை காபி ரூ. 200 வீதம் முழு தொகையினையும் செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம்.தொடர்பு அலுவலர் அலு வலங்களில் வரும் அக்., 20 க்குள் பதிவு செய்து விவசாயிகள் பயனடையலாம்.மேலும் காபி வெள்ளைத்தண்டுத் துளைப்பான்களை கட்டுப்படுத்த பெரோமோன் பூசசி பிடிப்பான்கள மான்ய விலையில காபி வாரிய அலுவலகங்களில் உள்ளது.தேவைப்படும் காபி விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. ஒரு பெரோமோன் பூச்சி பிடிப்பானின் விலை ரூ. 41.50. தேவைப்ப

டும் விவசாயிகள் சம்மந்தபட்ட அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம், என்றார்.

## கரும்புக்கு டன்னுக்கு ரூ. 4,000விலை நிர்ணயிக்க வலியுறுத்தல்

தஞ்சாவூர்: கரும்பு டன் ஒன்றுக்கு, நான்காயிரம் ரூபாய் நிர்ணயித்து, முன்கூட்டியே வழங்க வேண்டும் என, கரும்பு விவசாயிகள், உற்பத்தியாளர்கள் கலெக்டரிடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் குறைதீர்க்கூட்டத்தில், குருங்குளம்

சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் ராமநாதன், பொதுச்செயலாளர் திருப்பதி, அமைப்பாளர் புண்ணியமூர்த்தி, பொருளாளர் அர்ச்சுணன், வக்கீல் ஜீவக்குமார், கோவிந்தரான் ஆகியோர் தலைமையில் விவசாயிகள் கோரிக்கை மனு கொடுத்தனர்.மனுவில், சர்க்கரை ஆலையில் கரும்பு அரைவை பணி துவங்க உள்ள நிலையில் மத்திய அரசும், மாநில அரசும் கரும்புக்கான விலையை இன்னும் அறிவிக்கவில்லை. உரவிலை உயர்வு, கூலி ஆட்கள் சம்பளம் ஏறி விட்டது. எனவே கரும்புக்கு டன் ஒன்றுக்கு, நான்காயிரம் ரூபாயை முன்கூட்டியே நிர்ணயித்து, அரசு அறிவிக்க வேண்டும்.

வெட்டுக்கூலியை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டும். கரும்புக்கு வாங்கிய கடனை ரத்து செய்து அரசு உத்தரவிட வேண்டும். மின்வெட்டால் பாதித்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 50 ஆயிரம் ரூபாய் வீதம் நஷ்டஈடு வழங்க வேண்டும். தினமும், ஒரு மணி நேரம் மட்டுமே மின்சப்ளை செய்யப்படுகிறது. பகலில், ஆறு மணி நேரமும், இரவு, ஆறு மணி நேரமும் தொடர்ந்து மின்வினியோகம் செய்தால், ஓரளவு விவசாயம் மேற்கொள்ள வழி ஏற்படும்.
தற்போதுள்ள நிலையே மேலும் நீடித்தால் தமிழகத்தில் விவசாயமே பொய்த்து விடும். எனவே, போர்க்கால அடிப்படையில் விவசாயிகளின் பிரச்னைகளை தீர்க்க அரசும், மாவட்ட நிர்வாகமும் முன்வர வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

## சர்க்கரை ஏற்றுமதி ஓராண்டிற்கு நீட்டிப்பு



புதுடில்லி: நடப்பு 2012-13ம் சந்தைப்பருவத்தில் (அக்.,- செப்.,), பொது உரிம அடிப்படையில் சர்க்கரையை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி, மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என, மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்துள்ளார்.உள்நாட்டிற்கான தேவையை விட, சர்க்கரை உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீடு காரணமாகவே, அதன் ஏற்றுமதி, ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.நடப்பாண்டு மே மாதம், பொது உரிம

அடிப்படையில், சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது. இது, சென்ற செப்டம்பர் மாதத்துடன், காலாவதியானதை தொடர்ந்து, தற்போது புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.நாட்டின் சர்க்கரை உற்பத்தி, சென்ற செப்டம்பருடன் முடிந்த, சந்தைப் பருவத்தில், 2.30 - 2.35 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, முந்தைய பருவத்தில், 2.60 கோடி டன்னாக இருந்தது.உலகில், சர்க்கரை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நம் நாட்டில் ஆண்டுக்கு 2.20 கோடி டன் சர்க்கரை பயன்படுத்தப்படுகிறது. சென்ற சந்தைப்பருவத்தில், 35 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டது.

இன்றைய வேளாண் செய்திகள்

15.10.2012 P.M

16.10.2012 A.M

## வேளாண் விற்பனை குழு மீண்டும் செயல்படுமா?



நெல்லை : தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் முடங்கி கிடக்கும் வேளாண் விற்பனைக் குழுவுக்கு புத்துயிர் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாகவே வேளாண் விற்பனைத் துறையுடன் இணைந்து வேளாண் விற்பனைக்குழுவும் செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் ஒரு தலைவர், துணை தலைவர் உள்பட 8 உறுப்பினர்கள் இடம் பெற்றிருப்பர். ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண் சார்ந்த பணிகளை கண்காணிப்பதில் இக்குழு முக்கிய பங்கு வகித்தது. குறிப்பாக விவசாயிகளுக்கு தேவையான இடங்களில் களம் அமைத்து கொடுத்தல், வாழைதார்களை பதப்படுத்தும் மையம், புதிய உழவர்சந்தைகளை அமைத்தல் உள்ளிட்ட பணிகளில் விவசாயிகளுக்கு உறுதுணையாக இருந்து வந்தது.

இக்குழுவில் அரசியல் சார்ந்த தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இடம் பெற்றதால், ஆளும்கட்சியை சேர்ந்தவர்களும் இக்குழுவில் சேர ஆர்வம் காட்டினர். கடந்த ஒன்றரை

ஆண்டுகளாக இக்குழு முடங்கி கிடக்கிறது. கடந்த ஆட்சியில் இக்குழு இறுதிவரை செயல்பட்டது.

இந்நிலையில் கடந்த 2011ம் ஆண்டு முதல் இக்குழு கலைக்கப்பட்டு, அதற்குரிய பணிகள் அனைத்தும் வேளாண் விற்பனைதுறை துணை இயக்குனர் வசம் ஒப்படைக்கப்பட்டது. விளை பொருட்களின் தரம் கண்டறிதல், விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் ஆகியவற்றை அளித்து வரும் வேளாண் விற்பனை துறையால் அனைத்து பணிகளையும் தற்போது ஒருங்கே கவனிக்க முடியவில்லை.

எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண் விற்பனைக்குழுவுக்கு புத்துயிர் அளிக்கப்பட வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக வேளாண் விற்பனைக்குழு தலைவர், துணை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பணியிடங்கள் காலியாக கிடப்பதால், கட்சியினரும் அதிருப்தியில் உள்ளனர். தமிழகத்தில் பருவமழை துவங்கி, வேளாண் பணிகள் மும்முரம் அடையும் சூழலில், வேளாண் விற்பனை துறையின் பொறுப்புகளை பங்கீட்டு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## டெல்டா பாசனத்துக்கு நீர்திறப்பு 16,000 கனஅடியாக குறைந்தது



மேட்டூர் : மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு நேற்று மாலை நீர்திறப்பு வினாடிக்கு 16 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது. இதனால் அணை நீர்மட்டம் கடந்த 2 ஆண்டுகளுக்கு பின்னர் 65 அடிக்கும் கீழ் குறைந்துள்ளது. கர்நாடக அணைகளில் இருந்து

தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளதால் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருந்த நீரின் அளவு வெகுவாக குறைந்து விட்டது. காவிரிநீர் பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையால் நேற்று முன்தினம் வினாடிக்கு 1362 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று மாலை சற்று அதிகரித்து வினாடிக்கு 2883 கனஅடியாக இருந்தது.

இதேபோல், டெல்டா மாவட்டங்களில் மழை பெய்துள்ளதால் அணையில் நீர்திறப்பும் குறைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 18,178 கனஅடியாக திறக்கப்பட்டு வந்த தண்ணீர், நேற்று மாலை 16,000 கனஅடியாக குறைக்கப்பட்டது. மேலும், அணையின் கிழக்கு, மேற்கு கால்வாய் பகுதிகளில் மழை பெய்துள்ளதால் கால்வாயில் நீர்திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது. நீர்வரத்தை காட்டிலும் திறப்பு அதிகமாக உள்ளதால் நேற்று முன்தினம் மாலை 65.80 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று மாலை 64.10 அடியாக குறைந்தது. நீர்இருப்பு 27.83 டிஎம்சி.

மேட்டூர் அணை நீர்மட்டம் 2 ஆண்டுகளுக்கு பின்னர் 65 அடிக்கும் கீழ் சரிந்துள்ளது. கடந்த 25.10.10 அன்று அணை நீர்மட்டம் 64.62 அடியாக இருந்தது. அதன் பின்னர் தற்போதுதான் 65 அடிக்கும் கீழே நீர்மட்டம் சென்றுள்ளது.

## சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி மேலும் ஓராண்டு நீட்டிப்பு



புதுடெல்லி : உள்நாட்டில் சர்க்கரை தட்டுப்பாடு ஏற்படக் கூடாது என்பதற்காக சர்க்கரை ஏற்றுமதிக்கு முன்பு தடை விதிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு உற்பத்தி அதிகரித்ததால்,

ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில், நடப்பாண்டு சர்க்கரை உற்பத்தி 2.40 லட்சம் கோடி டன் வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. அதே சமயம், ஆண்டு தேவை 2.25 லட்சம் கோடி டன் அளவில் உள்ளது. எனவே, இந்த ஆண்டிலும் ஏற்றுமதியை அனுமதிக்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

இது பற்றி, மத்திய உணவு துறை அமைச்சர் கே.வி.தாமஸ் கூறுகையில், 'பொது உரிமம் அடிப்படையில் சர்க்கரை ஏற்றுமதியை மேலும் ஓராண்டுக்கு அனுமதிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது' என்றார். இதற்கிடையே, சர்க்கரை மீதான கட்டுப்பாட்டை விலக்க வேண்டுமென சி.ரங்கராஜன் குழு அளித்துள்ள பரிந்துரை குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

15th oct 2012 P.M

**விவசாயிகள் சங்க மாநாட்டில் தீர்மானம் விளைநிலங்களை ரியல் எஸ்டேட் தொழிலுக்கு பயன்படுத்த கூடாது**

திருப்போரூர், : தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் காஞ்சிபுரம் மாவட்ட 28வது மாநாடு நடந்தது. இதை முன்னிட்டு, திருப்போரூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் இருந்து பேரணி புறப்பட்டு, திருப்போரூர் ரவுண்டானாவை சென்றடைந்தது. பின், பொதுக்கூட்டம் நடந்தது.

கூட்டத்துக்கு, தமிழ்நாடு விவசாயிகள் சங்க பகுதி செயலாளர் மாரி தலைமை தாங்கினார். பீமாராவ் எம்எல்ஏ, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில தலைவர் சந்திரா உள்ளிட்டவர்கள் பேசினர். அரங்கநாதன் விவசாயிகள் சங்க கொடியை ஏற்றிவைத்தார்.

2வது நாள் மாநாடு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

விவசாய நிலங்களை தொழிற்சாலை, கல்வி நிறுவனங்கள், ரியல் எஸ்டேட் தொழிலுக்கு பயன்படுத்தக்கூடாது. நில அபகரிப்பு வழக்குகளில் சிக்கியுள்ள அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தில் உள்ள ஏரி, குளம், கால்வாய்களை சீரமைக்க வேண்டும். நெல் குவிண்டாலுக்கு ரூ.2,500, கரும்பு டன்னுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும். தடையில்லாமல் மின்சாரம் வழங்கவேண்டும். வட்டி இல்லாத கடன் தர வேண்டும். இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

மாவட்ட குழு உறுப்பினர்கள் சங்கர், மனோகரன், அழகேசன், சிபிஎம் மாவட்ட செயலாளர் மோகனன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## உயர்விளைச்சல் பெற விதை தரம் அறிய பரிசோதனை அவசியம் வேளாண் அதிகாரி வலியுறுத்தல்

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

வேளாண்மையின் உயர் விளைச்சலை பெற தரமான விதைகளை பயன்படுத்துவது மிக முக்கிய தொழில்நுட்பம் ஆகும். தரமான விதை என்பது, நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு குறையாத முளைப்பு திறன், புறத்தூய்மை, இனத்தூய்மை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு ஈரப்பதம், பிற ரக விதையின்றி பூச்சுநோய் தாக்குதல் இல்லாமல் இருப்பது அவசியமாகும். ஆகவே, உயர் விளைச்சலை பெற விவசாயிகள் தாங்கள் உபயோகப்படுத்தும் விதைகள் தரமானது தான் என அறிந்து விதைத்திட, விதை பரிசோதனை அவசியமாகும்.

எனவே விவசாயிகள் தங்கள் கைவசம் உள்ள விதைகளின் தரத்தை அறிந்து கொள்ளவும், விதை விற்பனையாளர்கள் தங்கள் விவசாயிகளுக்கு நிர்ணயித்து வைத்திருக்கும் விதைகளின் தரத்தை அறிந்து கொள்ளவும். விதை மாதிரிகளை தாங்களாகவே உரிய அளவில் எடுத்து, உலர்ந்த துணிப்பையில் இட்டு அதனுடன் விதை மற்றும் மாதிரி அனுப்புவோரின் விவரங்களை இணைத்து, விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை ஆய்வகம், காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். உடன் விதை பரிசோதனை கட்டணமாக ரூ 30 செலுத்தவேண்டும். விதை பரிசோதனை முடிவுகள் அவரவர் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். ஆகவே விவசாயிகளும், விதை விற்பனையாளர்களும் பயன்பெற கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

## விளைநிலத்தில் கற்களை கொட்டியதால் 32 ஆண்டுக்கு இழப்பீடு தரவேண்டும் டாமின் நிறுவனத்துக்கு விவசாயிகள் வலியுறுத்தல்

திருக்கழுக்குன்றம், : புலிக்குன்றம் கிராமத்தில் விவசாய நிலத்தில் கற் களை போட்ட டாமின் நிறுவனம் 32 ஆண்டுக்கான இழப்பீடு தர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருக்கழுக்குன்றம் அடுத்த புலிக்குன்றம் கிராமத்தில் உள்ள மலையில் கடந்த 1980ம் ஆண்டு முதல் 2000ம் ஆண்டு வரை 20 ஆண்டுகள் தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) சார்பில் கிரானைட் கற்கள் வெட்டி எடுத்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. கிரானைட் வெட்டிய எடுத்தபோது வீணான கற்களை மலை யின் அருகில் உள்ள விவசாய நிலங்களில் போட்டு விட்டனர்.

கடந்த 32 ஆண்டாக அந்த விவசாய நிலத்தில் கற்கள் அகற்றப்படாமல் அப்படியே கிடக்கிறது.

இதனால் 10 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலம் விளைச்சலுக்கு பயன்படுத்த முடியாமல் உள்ளது. அந்த நிலத்தின் உரிமையாளர்கள் விவசாயம் செய்ய முடியாமலும், நிலத்தை விற்பனை செய்ய முடியாமலும் அவதிப்படுகின்றனர்.

இது பற்றி விவசாயிகள் கூறுகையில், எங்கள் பட்டா நிலத்தில் உள்ள இந்த பாறைகளை அகற்ற டாமின் நிறுவனத்துக்கு பல முறை கோரிக்கை விடுத்தோம். அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கிறது. கடந்த 32 ஆண்டாக விவசாயம் பாதிக்கப்பட்டதால் அதற்கு உரிய இழப்பீட்டை டாமின் நிறுவனம் வழங்க வேண்டும். இங்கு 2000ம் ஆண்டில் கிரானைட் வெட்டும் பணி நிறுத்தப்பட்ட பிறகும் கற்களை அகற்றாமல் இருக்கின்றனர். இதனால் நாங்கள் விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். இது பற்றி கலெக்டர், முதல்வருக்கும் மனு அனுப்பி உள்ளோம். இனிமேலாவது கற்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

இது பற்றி டாமின் அதிகாரி ஒருவரிடம் கேட்டதற்கு, பாதிக்கப்பட்ட விவசாயிகள் கற்களை அகற்றும்படி தொடர்ந்து கோரிக்கை விடுக்கின்றனர். எங்கள் துறையின் உயர் அதிகாரிதான் இதில் முடிவு எடுக்க வேண்டும் என்றார்.

## கூடுதல் வருவாய் கிடைக்கும் விதை உற்பத்தி தொழில் எளிதானது வேளாண் அதிகாரி தகவல்

பெரம்பலூர், : விதை உற்பத்தி தொழில் மிக எளி தானது என்று மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம் கூறினார்.

பெரம்பலூர் வட்டாரத்தில் விதை உற்பத்தியில் ஆர்வமுள்ள விவசாயிகள் மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கான நடை முறைப்பயிற்சி வேளாண்மை துறை மற்றும் அங்கக சான்றிதழ் துறை சார்பில் பெரம்பலூர் ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் நடந்தது. விதைச்சான்று அலுவலர் பழனிச்சாமி வரவேற்றார். வேளாண்மை துணை இயக்குனர் ஆல்பிரெட், விதைச்சான்று உதவி இயக்குனர் முரளிதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குனர் சேகர், விதைச்சான்று அலுவலர் பழனிச்சாமி ஆகியோர் பேசினர்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம் பயிற்சி கையேட்டை வெளியிட்டு பேசியதாவது, விவசாயிகள் வேளாண்மை தொழிலை மிகவும் ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். வேளாண்மை துறையில் அறிவுறுத்தப்பட்டுள்ள உயர் தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு தொழில் நுட்பங்களை கடைபிடித்தால் மகசூல் அதிகரிக்கும்.

விவசாயிகள் எளிமை யாக ஆரம்பிக்கும் தொழிலாக விதை உற்பத்தி தொழில் அமைந்துள்ளது.

விதையினுடைய விலை தானிய விதையை விட 2 மடங்காக உள்ளது. எனவே விதை உற்பத்தியில் அதிகளவில் விவசாயிகள் ஈடுபட வேண்டும். குறிப்பாக பயிறு வகை மற்றும் எண்ணை வித்து விதை உற்பத்தியில் அதிக லாபம் கிடைக்கும். எனவே விதை உற்பத்தியில் ஆர்வமுள்ள விவசாயிகள் அனைவரும் விதை உற்பத்தி தொழில் பயிற்சியை பயன்படுத்தி தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்ள வேண்டும்.

விவசாயிகள் வேளாண்மை துறை மூலம் வழங்கப்படும் அனைத்து திட்டங்களையும் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். தரமான சான்று பெற்ற விதைகளை நடவு செய்து 20 சதவீத கூடுதல் மகசூல் பெற வேண்டும் என்றார்.

பயிற்சியில் விதை உற்பத்தியின் முக்கியத்துவம், விதை பண்ணை பதிவு, வயல் ஆய்வு, சுத்திகரிப்பு பணி, விதை பரிசோதனை ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டது. பயிற்சியில் ஆர்ஏடிபி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இடு பொருட்கள் வழங்கப்பட்டது.

பெரம்பலூர் வட்டாரத்தை சேர்ந்த  விவசாயிகள் மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர். வேளாண்மை அலுவலர்(பொ) பச்சியம்மாள் நன்றி கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்
16.10.2012 A.M

**மகாளய அமாவாசையை முன்னிட்டு**
**சேலம் மாவட்ட உழவர் சந்தைகளில் காய்கறிகள் ரூ.35 லட்சத்துக்கு விற்பனை**
**வாழைக்காய், அகத்தி கீரை விற்பனை அமோகம்**

சேலம் மாவட்ட உழவர் சந்தைகளில் மகாளய அமாவாசையை முன்னிட்டு நேற்று காய்கறிகள் 35 லட்சத்து 8 ஆயிரத்துக்கு ரூபாய்க்கு விற்பனை ஆனது.

மகாளய அமாவாசை

சேலம் மாவட்டத்தில் மொத்தம் 11 இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. சந்தைக்கு விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய் ம் காய்கறிகளை கொ டு வந்து விற்பனை செய்கின்றனர். சேலம் மாநகரில் அஸ்தம்பட்டி, தாதகா பட்டி, அம்மா பேட்டை, சூரமங்கலம் ஆகிய இடங்களில் உழவர் சந்தைகள் உள்ளன.

மகாளய அமாவாசையை முன்னிட்டு நேற்று உழவர் சந்தைகளில் வழக்கத்துக்கு மாறாக காய்கறிகளை விவசாயிகள் அதிகம் கொ டு வந்தனர். வாங்க கூடிய பொதுமக்களும் அதிகம் வந்ததால் உழவர் சந்தைகளில் கூட்டம் அலைமோதியது.

ரூ.35 லட்சம் விற்பனை

சேலம் மாவட்ட உழவர் சந்தைகளுக்கு நேற்று 1,181 விவசாயிகள் 214 டன் காய்கறிகளை விற்பனைக்கு கொ டு வந்தனர். 46 ஆயிரம் பேர் உழவர் சந்தைக்கு சென்று காய்கறிகளை வாங்கி சென்றனர். இதன் மூலம் நேற்று ரூ.35 லட்சத்து 8 ஆயிரத்துக்கு காய்கறிகள் விற்பனை ஆனது.

அதிக பட்சமாக சேலம் சூரமங்கலம் உழவர் சந்தைக்கு 232 வியாபாரிகள் 42 டன் காய்கறிகளை கொ டு வந்தனர். இதில் ரூ.6 லட்சத்து 60 ஆயிரத்துக்கு காய்கறிகள் விற்பனையானது. உழவர் சந்தைக்கு 8 ஆயிரத்து 500 பேர் வந்தனர்.

தாதகா பட்டி உழவர் சந்தை

அடுத்ததாக, தாதகா பட்டி உழவர் சந்தைக்கு 236 வியாபாரிகள் 36 டன் காய்கறிகளை கொ டு வந்தனர். ரூ.6 லட்சத்து 26 ஆயிரத்துக்கு காய்கறிகள் விற்பனையானது. 7 ஆயிரத்து 200 பேர் சந்தைக்கு வந்து காய்கறிகளை வாங்கி சென்றனர்.

இதே போல, ஆத்தூர் புது பேட்டையில் உள்ள உழவர்சந்தையில் நேற்று காய்கறிகள் விற்பனை

வழக்கத்தை விட 3 மடங்கு விற்பனையானது. இதில் 174 விவசாயிகள் கலந்து கொ டனர். ஆத்தூர் உழவர்சந்தையில் 39 டன் காய்கறிகள் விற்பனையானது. இதில் 7,500 பேர் கலந்து கொ டு, காய்கறிகளை தக்காளி, கத்தரிக்காய், பூசணி, வாழைக்காய், முருங்கைகாய் உள்பட பல்வேறு காய்கறிகளை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் வாங்கி சென்றனர். மொத்தம் ரூ.6 லட்சத்து 77 ஆயிரத்துக்கு விற்பனையானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவரை, வாழைக்காய்

சேலம் அஸ்தம்பட்டி உழவர் சந்தையில் 74 விவசாயிகள் 12 டன் காய்கறிகள் விற்பனைக்கு கொ டு வந்தனர். இதில், 2 லட்சத்து 6 ஆயிரத்துக்கு விற்பனை செய்ய பட்டது. 2 ஆயிரத்து 500 பேர் வந்து காய்கறிகள் வாங்கி சென்றனர். மகாளய அமாவாசையை முன்னிட்டு, நேற்று சேலம் மாநகரம் மற்றும் மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில் வாழைக்காய், வாழை இலை, பூசணிக்காய், அவரை, கொத்து அவரை, கத்தரிக்காய், வெ டை, அகத்தி கீரை போன்ற காய்கறிகள் அதிகமாக விற்பனை ஆனது.

**கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வே டும்**
**விவசாயத்திற்கு 12 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்க வே டும்**
**குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டரிடம், அனைத்து விவசாய சங்கங்கள் கோரிக்கை**

கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வே டும். விவசாயத்திற்கு 12 மணி நேரம் மும்முனை மி ன்சாரம் வழங்க வே டும் என்று குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டரிடம் அனைத்து விவசாய சங்கங்கள் கோரிக்கை விடுத்து உள்ளன.

குறைதீர்க்கும் கூட்டம்

தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொ டு மனுக்கள் கொடுத்தனர்.

இதில் தஞ்சை மாவட்ட குருங்குளம் அறிஞர் அ ணா சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் ராமநாதன் தலைமையில் நிர்வாகிகள் ஒரு கோரிக்கை மனு கொடுத்தனர். அதில் அவர்கள் கூறியிரு பதாவது:–

சர்க்கரை ஆலைகள் தொடங்க உள்ள நிலையில் மத்திய அரசும், மாநில அரசும் கரும்புக்கான விலையை இன்னும் அறிவிக்கவில்லை. உரவிலை, கூலியாட்கள் சம்பளம் வி ணை தொடும் அளவுக்கு ஏறிவிட்டது. எனவே கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வே டும். வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வே டும். கரும்புக்கு வாங்கிய கடனை அரசு ரத்து செய்ய வே டும், மின்சாரத்தால் பாதிக்க பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க வே டும். இவ்வாறு அவர்கள் அதில் கூறி உள்ளனர்.

மும்முனை மின்சாரம்

இதே போல் அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டமை பு சார்பில் கலெக்டரிடம் கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியிரு பதாவது:–

தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் தற்போது சம்பா சாகுபடி நடைபெற்று வருகிறது. ஆற்று பாசனம் மூலம் நடைபெறும் குறுவை சாகுபடி நடைபெறாமல் தற்போது ஒரு போக சாகுபடியாக சுமார் 4 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி நடைபெற்று வருகிறது. மேட்டூரில் தற்போது உள்ள த ணீர் இன்னும் 20 நாட்களுக்குத்தான் த ணீர் திறக்க முடி ம் நிலை உள்ளது. எனவே கர்நாடகத்திடம் இருந்து தமிழகத்திற்கு வழங்க வே டிய த ணீரை பெறுவதற்கு தமிழக அரசு அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தை நடத்தி அனைத்துக்கட்சி தலைவர்கள் குழுவோடு பிரதமரை சந்திக்க வே டும்.

உச்ச திமன்ற தீர் பை ம், காவிரி க காணி பு குழு அறிவித்த தீர் பை ம் மதிக்காமல், தமி ழகத்திற்கு ஒரு சொட்டு த ணீர் கூட திறக்க முடியாது என கூறிவரும் கர்நாடக அரசின் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுத்து தமிழகத்திற்கு த ணீர் பெற்றுத்தர வே டும். விவசாயத்திற்கான மும்முனை மின்சாரம் தற்போது 3 மணிநேரம் கூட வருவது இல்லை. எனவே முதல்–அமைச்சர் அறிவித்த 12 மணி நேரமாவது விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் வழங்க வே டும்.

இவ்வாறு அவர்கள் அதில் கூறி உள்ளனர்.